Crl.M.P. No. 113/2025 தேதி : 01.12.2025.

PW1– அம்மாவாசி த/பெ பால்சாமி

**சத்தியபிராமாண வாக்குமூலம் :**

எதிரி எனக்கு எனது நண்பர் சுரேந்திரன் என்பவர் மூலம் பழக்கமானார். கடந்த 2024ம் ஆண்டு ஜுன் மாதம் இறுதியில் எதிரி என்னை தொடர்பு கொண்டு அவரச தேவைக்காகவும் தொழில் அபிவிருத்திக்காவும் ரூபாய் 5 லட்சம் தொகை கடனாக கேட்டார் என்றும், நான் ஆரம்பத்தில் அவ்வளவு பணம் இல்லை என்று கூறினேன். அதன்பின்பு ரூபாய் 100க்கு 1.5% வட்டி மாதம் தவறாமல் தந்துவிடுவதாகவும், 4 மாத காலத்திற்குள் கடனை திரும்ப செலுத்தி விடுவதாகவும் கூறினார், அதன்பின்பு நான் எனது சேமிப்பு கணக்கு மற்றும்நண்பர்களிடம் கைமாற்று பெற்று எதிரிக்கு ரூபாய் 5 லட்சத்தை கடனாக கடந்த 25.07.2024ம் தேதி மதுரைக்கு உதிரிபாக வாங்க வந்த எதிரிக்கு எனது வீட்டில் வைத்து கொடுத்ததாகவும், பின்னர் எதிரி மாதமாதம் வட்டி தொகையை கொடுக்கவில்லை அவரிடம் நான் தொடர்ந்து வட்டிபணத்தை கேட்டு வந்த நிலையில் கடந்த 13.08.2025ம் தேதி உசிலம்பட்டி உள்ள எனது வீட்டிற்கு வந்த எதிரி 10.09.2025ம் தேதிக்குள் ரூபாய் 5 லட்சம் கிடைத்துவிடும் என்றும், அதற்கு ஆதரவாக ரூபாய் 5 லட்சத்திற்கு எதிரியின் வங்கியான திருப்பூர் பிஎன் ரோடு கிளை கர்நாடகா வங்கியின் காசோலை எண் 476146 என்ற காசோலையை 10.09.2025ம் தேதியிட்டு ரூபாய் 5 லட்சம் தொகை நிரப்பி, கையொப்பமிட்டு என்னிடம் கொடுத்துவிட்டு, வட்டி தொகையை பின்னர் கொடுப்பதாக என்னிடம் கூறினார். பின்னர் 10.09.2025ம் தேதி எதிரியை தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்துவிட்டு பின்னர் 17.09.2025ம் தேதி

காசோலையை வசூலுக்கு செலுத்தி பணத்தை பெற்றுக்கொள்ளுமாறு எதிரி கூறினார் என்றும், அதன்பின்பு எனது வங்கியான உசிலம்பட்டி கிளை மெர்கண்டைல் வங்கியில் 17.09.2025ம் தேதி வசூலுக்கு போட்டேன் என்றும், அதன்பின்பு கடந்த 18.09.2025ம் தேதி குறிப்பாணையுடன் காசோலையானது முகமதிப்பு மறுக்கப்பட்டு காசோலையானது திருப்பப்பட்டது என்றும், எதிரியானவர் என்னிடம் பல வாக்குறுதிகளை கொடுத்து பணத்தை பெற்றுக்கொண்டு பின்னர் காசோலையில் வேண்டுமென்றே என்னை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் மாற்றி கையெழுத்து போட்டு கொடுத்துள்ளார். மேற்படி காசோலையானது முக மதிப்பு மறுக்கப்பட்டு கட்டாயம் திரும்பும் என்று நன்கு தெரிந்தே என்னை எதிரியானவர் மோசடி செய்துள்ளார். அதன்பின்பு நான் கடந்த 17.10.2025 ம் தேதி வழக்கறிஞர் மூலம் ஒரு கேட்பு அறிவிப்பை அனுப்பினேன் என்றும், அந்த அறிவிப்பை கடந்த 22.10.2021ம் தேதி பெற்றுக்கொண்ட எதிரி இதுநாள்வரை எந்த ஒரு பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை. எதிரி கொடுத்த காசோலை எண் 476146ன் அசல் **பு.சா.ஆ.1** ஆகும், வங்கி காசோலையை திருப்பி அனுப்பியதற்கான குறிப்பாணை **பு.சா.ஆ.2** ஆகும், எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் நோட்டீஸ் **பு.சா.ஆ.3** ஆகும், 17.10.2025ம் தேதி நோட்டீஸ் அனுப்பிய விரைவுத்தபால் ரசீது **பு.சா.ஆ.4** ஆகும், 22.10.2025ம் தேதி எதிரி தபால் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை **பு.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

S.d.Ammavasi
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.